IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 43/2009

Deposition of Witness : PW 1

Name : ஜோதிரத்தினம்மாள் (வயது –73 )

Father's Name /W/o : க/பெ எத்திராஜ்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : மேல்பாக்கம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 08.07.2025.

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. வழக்கு எண்.103/1995 இல் 9 ஆவது பிரதிவாதி முனிரத்தினத்தை நான் என் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் முனிரத்தினத்திற்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அசல் வழக்கு எண்.75/1995 இன் இடைக்கால மனு எண். 55/2024 இன் இறுதிநிலை தீர்ப்பாணை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு 25.08.2014 ஆம் ஆண்டு தள்ளுபடி செய்யப்பட்டதா என்றால் இல்லை.

2. மேற்படி மனுவில் அசல் வழக்கு எண்.75/1995 சொத்து அட்டவணை சி ஐட்டம் எனக்கு ஒதுக்கப்பட்டதா என்றால் சரிதான். இடைக்கால மனு எண். 55/2024 தள்ளுபடி செய்ததற்கு நான் அரக்கோணம் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து ஏ.எஸ் 23/2015 என் சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

3. வழக்கு சொத்து எனக்கு சொந்தம் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு , நாகரத்தினம்மாள் , ஜீவரத்தினம்மாள் மற்றும் கஜேந்திராம்மாளுக்கு சொந்தம் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அருண் எனக்கு யார் என்றால் என் மகன். அவர் சர்வே துறையில் பணி புரிகிறார். என் மகன் சர்வே துறையில் பணி புரிந்து வருவதால் நான் என் பெயருக்கு சொத்து மாற்றம் செய்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. நான் தாவா சொத்தை அனுபவித்து வருவதற்கு ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் விளம்புகை பரிகாரம் கோரமல் நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் சட்டப்படி கோர முடியாது என்றால் சரியல்ல. 9 ஆவது பிரதிவாதியை அலைகழிக்க வேண்டுமென்று தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த தாவாவை சட்டப்படி தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.